முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.7.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், முதன்மைச் செயலாளர் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் சந்தித்து, விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதையொட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.7.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, இ.பரந்தாமன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத் தலைவர் துறைமுகம் காஜா, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் எஸ். ஆஸ்டின் மற்றும் கழக நிர்வாகிகள் சந்தித்து, விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதையொட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.

"சாதிய, மதவெறி சக்திகளுக்கு அரசியல் தளத்தில் இடமில்லை" என

விக்கிரவாண்டி மக்கள் நெற்றியடி தீர்ப்பு!

இரா.முத்தரசன் அறிக்கை !

சென்னை, ஜூலை 15- விக்கிரவாண்டியில் கழகத்தின் வெற்றிக்கு வாழ்த்துத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், "சாதிய, மதவெறி சக்திகளுக்கு அரசியல் தளத்தில் இடமில்லை" என்பதை விக்கிரவாண்டி மக்கள் நெற்றியடி தீர்ப்பாக வழங்கியுள்ளார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் சாதிய, மதவெறி சக்திகளை முற்றாக நிராகரித்து, திமுகழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை மகத்தான வெற்றி பெறச் செய்துள்ளனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் அடைந்த தோல்வியால் நிலை குலைந்து போன அ.இ.அ.தி.மு.க. தேர்தல் களம் இறங்கவில்லை. இந்த நிலையில் பா.ம.க. அ.இ.அ.தி.மு.க. வாக்குகளை பெறலாம் என்ற ஆசையுடன் அலைந்தது. ஆனால், தமிழ்நாட்டில் சாதிய, மத வெறி சக்திகளுக்கு அரசியல் தளத்தில் இடமில்லை என்பதை விக்கிரவாண்டி மக்கள் நெற்றியடி தீர்ப்பாக வழங்கியுள்ளனர்.

கடந்த 2021 முதல் தமிழக மக்களின் உணர்வுகளை உள்வாங்கி நலத் திட்டங்களையும், இளைய தலைமுறையினரின் திறனை வளர்க்கும் ஊக்கம் தரும் திட்டங்களையும் செயல்படுத்தி வருவதுடன், வகுப்புவாத, பாசிச ஜனநாயக விரோத சக்திகளை எதிர்த்துப் போராடி வரும் கொள்கை உறுதி கொண்ட தி.மு.கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை வலுப்படுத்தும் வகையில் மக்கள் தீர்ப்பு அமைந்துள்ளது.

கள்ளக்குறிச்சி கருணாபுரம் விஷச் சாராய சாவு களைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேடிய மலிவான செயலை மக்கள் புறக்கணித்துள்ளனர்.

சார்பற்ற நடுநிலை நீதி பரிபாலன முறைக்கு எதிராக பா.ஜ.க. அமலாக்க முயற்சிக்கும் மூன்று குற்றவியல் சட்டங்களையும், மாணவர் சமூகத்தின் மருத்துவக் கல்வி கனவை சிதைத்து வரும் நீட் தேர்வில் நடந்த ஊழல், முறைகேடுகளை எதிர்த்து நீட் தேர்வு முறையில் தமிழ்நாட்டுக்கு விதிவிலக்கு கோரி வருவதையும் ஆதரித்து தமிழ்நாடு ஒன்றுபட்டு நிற்கிறது என்கிற உணர்வை வெளிப்படுத்தும் வகையில் இடைத்தேர்தல் வழியாக வெளிப்படுத்திய விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி மக்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு நன்றி பாராட்டி, வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

விக்கிரவாண்டி தொகுதியில் மாபெரும் வெற்றி!

முதல்வர் மு.க.ஸ்டாலினின் மூன்றாண்டு சாதனைகளே சான்று!

அமைச்சர் முனைவர் க.பொன்முடி பேட்டி!

விழுப்புரம், ஜூலை 15- விக்கிரவாண்டி தொகுதி வெற்றிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மூன்றாண்டு சாதனைகள் தான் காரணம் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தெரிவித்தார்.

அமைச்சர் முனைவர் க.பொன்முடி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

விக்கிரவாண்டி தொகுதியில் 67,757 வாக்குகள் வித்தியாசத்தில் மாபெரும் வெற்றி பெற்ற அன்னியூர் சிவா அவர்களுக்கு முதலில் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் மக்கள் பணிக்கு விக்கிரவாண்டி தொகுதி மக்கள் வாக்களித்துள்ளார்கள் பெருவாரியான வாக்குகள் அளித்த விக்கிரவாண்டி தொகுதி மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வெற்றிக்கு காரணம் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு க ஸ்டாலின் அவர்கள் தான் காரணம், அவர்களுடைய திட்டங்களான மகளிர் உரிமைத் திட்டம், மகளிர் இலவச பேருந்து பயணம், புதுமைப்பெண் திட்டம், காலை உணவுத்திட்டம், நான் முதல்வன் திட்டம், தமிழ் புதல்வன், திட்டம் இது போன்ற பல்வேறு திட்டங்களால் மக்கள் பெரும் பயன் அடைந்து, அவர்களின் திட்டங்களால் ஈர்க்கப்பட்டு இன்று நாடே திரும்பிப் பார்க்கும் வகையில் ஒரு மாபெரும் வெற்றியை விக்கிரவாண்டி தொகுதி மக்கள் முதலமைச்சர் அவர்களின் மூன்றாண்டு கால ஆட்சிக்கு பரிசாக தந்துள்ளனர்.

வருகிற சட்டமன்றத் தேர்தலுக்கு இது முன்மாதிரியான தேர்தலாக அமைந்துள்ளது 2026 சட்டமன்றத் தேர்தலில் தேர்தலில் 234 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறுவது உறுதி. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திட்டங்கள் கிராமப்புற மக்களிடையே முன்னேற்றத்தை உருவாக்கியுள்ளது. மாணவ, மாணவிகள் அவருடைய திட்டங்களால் பயன்பெறுகின்றனர். அதனால் தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு வாக்களித்துள்ளனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக இங்கு இரண்டு நாட்கள் சுற்றுப்பயணம் செய்து சூறாவளி பிரச்சாரம் மேற்கொண்ட இளைஞர்களை ஈட்டி முனைகளாக தீட்டி வரும் கழக இளைஞரணிச் செயலாளர் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிரச்சாரம் வெகுவாக மக்களை ஈர்த்துள்ளது. கடந்த தேர்தலில் அவர் ஒரு செங்கல்லை வைத்துக் கொண்டே பிரச்சாரம் செய்தது மிகவும் மக்களை கவர்ந்தது. அதேபோல் இந்த விக்கிரவாண்டி தொகுதியில் அவர் மேற்கொண்ட பிரச்சாரமும் பெருவாரியான மக்களை கவர்ந்துள்ளது.

இங்கு தேர்தல் பொறுப்பாளராக என்னையும், கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. அவர்களையும் கழகத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார். மேலும் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளராக டாக்டர் பொன். கௌதம சிகாமணி அனைவரும் இணைந்து பணியாற்றியதற்கு கிடைத்த வெற்றி இது என்பதை யாராலும் மறுக்க முடியாது. இன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நன்றி தெரிவிக்கும் அறிக்கையில் விக்கிரவாண்டி தொகுதி மக்களுக்கும், அதே போல் எனக்கும், எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. அவர்களுக்கும் மாவட்ட பொறுப்பாளராக தேர்வு செய்யப்பட்டுள்ள டாக்டர் பொன். கௌதம சிகாமணி அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகளுக்கும் இந்தியா கூட்டணி நிர்வாகிகளுக்கும் அவர் தனது அறிக்கையின் மூலம் நன்றிகளை தெரிவித்தார். அவர் வழியில் நானும் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் எங்களுக்கெல்லாம் ஆணையிட்டதன் பேரில் நாங்கள் கழக திராவிடமாடல் ஆட்சியின் மூன்றாண்டு கால சாதனைகளை மக்களிடம் சென்று பரப்பினோம், கூறினோம். நமது மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி அவர்களும் தொடர்ந்து பணியாற்றி இந்த மாபெரும் வெற்றியை பெற்றுள்ளோம்.

இந்த மாபெரும் வெற்றிக்கு உழைத்த அமைச்சர் பெருமக்கள், இந்தியா கூட்டணி நிர்வாகிகள், அதே போல திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய சார்பிலும், விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணி சார்பிலும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். நம்மை பிரிந்தும் பிரியாமல் நம் நினைவுகளிலேயே வாழும் நா.புகழேந்தி விட்டுச் சென்ற பணிகளை அன்னியூர் சிவா சிறப்பாக மக்கள் பணியாற்றுவார் அவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் இராமதாஸ் அவர்களும் பா.ம.க வும் நேரத்திற்கு, நேரம் மாறுவார்கள் இது தான் அவர்களுடைய கொள்கை, அந்தக் கட்சிக்கு கொள்கை கிடையாது அப்படியிருந்தால் அவர்கள் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைப்பார்களா? நீட் தேர்வு வேண்டாம் என கூறுகிறார்கள் ஆனால் பா.ஜ.க வுடன கூட்டணி வைத்துள்ளார்கள். பா.ஜ.க தலைவர் அண்ணாமலையிடம் பேசி நீட் தேர்வுக்கு விளக்கு கொண்டு வர வேண்டியது தானே, அவர்கள் எப்போதும் தேர்தலுக்கு, தேர்தல் மாறிக் கொண்டே இருப்பார்கள். அவருடைய மகன் அன்புமணி ஒன்றிய அமைச்சராக வேண்டும் என தி.மு.க.வுடன் கூட்டணி வைத்தார். இப்போது அமைச்சராக்க வேண்டும் என பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்துள்ளார்கள் அவர்களுக்கு கொள்கை கிடையாது, மக்கள் நலனில் அக்கறை கிடையாது. அதனால் தான் அவர்களுக்கு விக்கிர வாண்டி தொகுதி மக்கள் தக்க பாடம் கற்பித்துள்ளார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீது நம்பிக்கை மக்கள் வாக்களித்துள்ளனர். அன்னியூர் சிவா சிறப்பாக மக்கள் பணியாற்றுவார்.

இவ்வாறு செய்தியாளர்களிடம் அமைச்சர் முனைவர் க.பொன்முடி கூறினார்.

விக்கிரவாண்டி தொகுதியில் அன்னியூர் சிவா வெற்றி!

தீவனூர், திண்டிவனத்தில் பொதுமக்களுக்கு கழகத்தினர் இனிப்பு!

அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் வழங்கினர்!

திண்டிவனம், ஜூலை 15- விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளர்அன்னியூர் சிவா வெற்றி பெற்றதை தொடர்ந்து தீவனூர், திண்டிவனத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் தி.மு.க. வினர் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் அன்னியூர் சிவா வெற்றிபெற்றதை வரவேற்றுதிண்டிவனம் நகராட்சி செஞ்சி பேருந்து நிறுத்தம் அருகில் திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமையில் திமுகவினர் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

இதே போல் மயிலம் தொகுதி தீவனூர் கூட்டு சாலையில் மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி மாறன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

இதில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர்,மாவட்ட பொருளாளர் ரமணன், பொது குழு உறுப்பினர் கதிரேசன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சந்திரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.டி. பாபு, பிர்லா செல்வம், நிர்வாகிகள் பிரகாஷ், கௌதமன், மயிலம் ஒன்றிய குழு உறுப்பினர்கள் பரிதாசம்சுதீன், உமா ஞானசேகர், ராஜ்பரத், நிர்வாகிகள் சேகர், முனியாண்டி, பாஸ்கர், பிரபு, விஜயகுமார், ஆனந்தன், விஜயன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட நிர்வாகிகள் ,நகராட்சி நிர்வாகிகள் ஒன்றிய நிர்வாகி கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி தொகுதியில் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அன்னியூர் சிவா வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் அதிகாரியிடம் பெற்றார். உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தமா.இளந்திரையன், வி.சி.க மாவட்டச் செயலாளர்கள் பெரியார், திலிபன், ஒன்றியச் செயலாளர்கள் கல்பட்டு வி.இராஜா, ஜெய.ரவிதுரை, வேம்பி ரவி, க.மும்மூர்த்தி, ஜெ.ஜெயபால், ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், பேரூர் செயலாளர் நைனா முகமது, பேரூராட்சி தலைவர் அப்துல் சலாம், துணைத் தலைவர் பாலாஜி, உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்

கல்வி வளர்ச்சி நாள்



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 122 ஆவது பிறந்த நாள்

தரமான கல்வியும் மருத்துவமும் அனைவருக்கும் கிடைத்திடும் வகையில் நாம் செயல்படுத்திவரும் திட்டங்களை இன்னும் செம்மைப்படுத்திடப் பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளில் உறுதிகொள்வோம் !

– மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

நாள் : 15.7.2024, திங்கட்கிழமை, காலை 8.15 மணி
இடம் : அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப்பள்ளி, கீழச்சேரி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், திருவள்ளூர் மாவட்டம்

தமிழ்நாடு அரசின் சார்பில்
பெருந்தலைவர் காமராஜர்
அவர்களின் திருவுருவப் படத்திற்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மற்றும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

நாள் : 15.7.2024, திங்கட்கிழமை, காலை 9.30 மணி
இடம் : அண்ணா சாலை, பல்லவன் இல்லம் எதிரில், சென்னை

தமிழ்நாடு அரசின் சார்பில்
பெருந்தலைவர் காமராஜர் அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை–600 009

செ.ம.தொ.இ. / 708 / வரைகலை / 2024